
# மழலைகள் கீத மாலை



சங்கீதபூஷணம்
சைவப்புலவர், கலாபூஷணம்
அ. கி. ஏரம்பமூர்த்தி
மீசாலை மேற்கு, மீசாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மழலைகள் கீத மாலை

ஆக்கியோன்:

கலாபூஷணம், கலைஞான கேசரி, தமிழிசைக் கவிஞர்,
சைவப்புலவர், சைவசித்தாந்த பண்டிதர்,
சங்கீதபூஷணம் (*Annamalai University - India*)

**மீசாலையூர் அ. கி. ஏரம்பமூர்த்தி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதற்பதிப்பு : 2006
பதிப்புரிமை: ஆக்கியோனுக்கே

நூலாசிரியரின் வெளியீடுகள்:

| | |
|---|---|
| செந்தமிழ்க் கீதமாலை | 1964 |
| தெய்வக் கீதமாலை | 1970 |
| கீர்த்தனமாலை | 1998 |
| மழலைகள் கீதமாலை | 2006 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# சமர்ப்பணம்

## விநாயகர் துதி

விக்கின மென்றும் நீங்க
விரைந் தருள்செய் கணபதியே
சக்தி சிவனின் சுதனே
சித்தி புத்தி நாயகனே
மக்கள் நலமோங்கச் செய்த
மழலைகள் கீத மாலை
திக்கெலாம் மணங் கமழத்
திருவருள் தந்தே காப்பாய்.

## கலைமகள் துதி

வெள்ளைக் கமலமதில் வீற்றிருக்கும் கலைமகளே
வீணை மாலை யுடனேடு கரந்தனிலே கொண்டவளே
உள்ளக் கமலமதி லனுதினமும் வீற்றிருந்து
உயர்பாட லாக்கிடவே அருள்தந்து நிற்பவளே
கள்ளமிலா உளத்தோர்க்கு வேண்டுவரம் தருபவளே
கம்பனொடு காளமே கம்சிறக்க வைத்தவளே
வெள்ளிமலை நாதனருள் தந்திடவே உலகனைத்தும்
விரைந்துபடைக் கும்பிரமன் சக்தியேநின் னடிபோற்றி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செந்தமிழ்க் கீதமாலைக்கு

யாழ்ப்பாணம் - திருநெல்வேலி

சைவாசிரியர் கலாசாலை விரிவுரையாளராக விளங்கிய

**பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள்**

உவந்தளித்த

## அணிந்துரை

செந்தமிழ்க் கீத மாலை
தேன்சொரி மலர்கள் பல்கிப்
பைந்தமிழ்ச் சோலை யாகப்
பாலர்வா யூறச் செய்தான்
எந்தமக் கினியான் நல்லோன்
ஏரம்ப மூர்த்தி யென்பான்
வந்தஏ ழிசையின் செல்வன்
வழிவழி சிறக்க மாதோ.

*கலாசாலை வீதி,*
*திருநெல்வேலி.*
*01. 06. 64*

*சி. கணபதிப்பிள்ளை*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

மழலைகளுக்கான பாடல்கள் பல தொகுத்தளித் திருக்கிறார் ஆசிரியரும் சங்கீத வித்துவானுமாகிய திருவாளர் **அ.கி. ஏரம்பமூர்த்தி** அவர்கள். சங்கீதம் தெரிந்த ஒருவர் இயற்றிய பாடல்களாக இருப்பதால் ஓசை நயத்துடன் வரிகள் காணப்படுகின்றன. நூலாசிரியர் அறுபது தாண்டியவர். அநுப வங்கள் பெற்ற ஞானப்பழம். மிகுந்த சமய ஈடுபாடு கொண்ட இவர் தனக்கென அமைத்த கோயிலில் தியானம், பூசை வழிபாடி யற்றிக் கொண்டு எம்மிடையே வாழும் பழைய பண்பாட்டுப் பாரம்பரியங்களின் சின்னமாக விளங்குபவர்.

இவரின் உள்ளத்திலேபலநாள் குடியிருந்த எண்ணங்கள் கருக்கொண்டு குழந்தைப் பாடல்களாக வெளிவந்துள்ளன. குழந்தைகளுக்கு விருப்பமானவை பிராணிகள், பழங்கள், விளையாட்டுக்கள் போன்றவை. இவை வெகு லாவகமாக கொஞ்சு மொழியில் கையாளப்பட்டுள்ளது. பாடல்கள் இலகு வானவையாக ஆரம்பித்து முன்பள்ளிச் சிறுவர் (பாலர் பாட சாலை) முதல் ஆரம்பக் கல்விப் பிள்ளைகளும் இடை நிலைப் பிள்ளைகளின் முன் பருவத்தினருக்கும் பயன்படக் கூடியதாக அமைந்துள்ளன.

மாதா, பிதா, குரு தெய்வம் எனப் போற்றப்படுவது தமிழர் மரபு. முதல்த் தெய்வம் அம்மா. இரண்டாம் தெய்வம் அப்பா. மூன்றாம் தெய்வம் குரு. நான்காவது இடத்தில்தான் நாம் வழிபடும் கோயில்த் தெய்வங்களெல்லாம். இம்மரபு தப்பாமல் பதிய நூலாசிரியரின் முதற்பாட்டு நோக்கத்தக்கது.

இந்திய குழந்தைக் கவிஞர் அழவள்ளியப்பாவின் பாடல்கள் பெயர்போன பாடல்கள் ' **கொச்சி மஞ்சள் பூசவா'** என்ற அடியை பலமுறை பாடும் எமக்கு அதன் அர்த்தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரிவதில்லை. பலருக்கு இன்னும் தெரியாது. இந்தியாவின் கொச்சின் என்ற இடத்தில் விளைகின்ற பெயர் போன மஞ்சளே இப்பாடலில் குறிப்பிடப்பட்டுள்ளது. நூலாசிரியர் நம்மவர் எமது மண்ணில் வாழ்பவர் எங்கடை வடலிகள், பனைகள், பழங்கள், இடங்கள் எங்களுக்கே உரித்தான இடங்களில் கையாளப் பட்டுள்ளது.

மிகவும் பிரசித்தமான பாடல்வரி யாழ்ப்பாணக் கவிஞர் சோமசுந்தரப்புலவரது **'வெடி வாலைக் கிளப்பிக்கொண்டு ஓடுது கன்றுக்குட்டி'** இங்கு வந்த வால் சாதாரண வாலல்ல வெடிவால் இது எமது யாழ்ப்பாண மண்வாசனையின் மீதெழுந்த சொல், இவ்வாறான பல மரபுப் சொற்களை நூலாசிரியர் கையாண் டுள்ளார் நுழைத்து பார்த்து ரசிக்கலாம்.

நூலாசிரியர் தன்கவிதைகளூடு நற்பழக்க வழக்கங்களை யும் புகுத்தும் ஏற்பாடும் இடம்பெற்றுள்ளன. இறைபக்திப் பாடல்களும் கதைப்பாடல்களும் இடம்பெற்றுள்ளன. இவற்றின் மூலம் மழலைகளின் மனங்களைக் கவர்ந்து நற்குணங்களை வளரச் செய்கிறார். காவடி ஆட்டம், கரகம், கும்மிப்பாடல், ஆகியவற்றால் பிள்ளைகளின் மனத்தில் மிகுந்த மகிழ்ச்சியை யும் உற்சாகத்தையும் ஊட்டுகின்றார். இவை பழுத்த அநுப வத்தின் பால் எமக்குக் கிடைத்தவையாக எண்ணவேண்டும்.

ஆரம்பக் கல்வித்துறையில் பணியாற்றும் நான் மிக்க அனுபவமும் முதிர்ச்சியும் புலமையும் மிக்க நூலாசிரியருக்கு அணிந்துரை எழுதுவது எவ்வாறான பொருத்தப்பாடு என்பதை நானறியேன். என்னையும் ஒரு பொருட்டாக மதித்து எனக்கு வாய்ப்பளித்த நூலாசிரியருக்கு நன்றிகள் கூறி இப்பாடல்கள் மழலைச் செல்வங்களின் வாய்களில் முணுமுணுக்க வேண்டும். நான் அதைக் கேட்டின்புற வேண்டும் என எல்லாம் வல்ல இறை யருளை வேண்டி வாழ்த்தி அமைகிறேன்.

த. ஸ்ரீஸ்கந்தராஜன்,
உதவிக் கல்விப் பணிப்பாளர்,
ஆரம்பக் கல்வி,
தென்மராட்சி கல்வி வலயம்,
சாவகச்சேரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூன்முகம்

**எ**மது தென்மராட்சிப் பகுதியில் மீசாலை அ.மி. பாடசாலையில் அதிபராகச் சேவைசெய்த முத்தமிழ்க் கலைஞர் பூதத்தம்பி அதிபர் அவர்கள் முன்பு **'பாலர் கீத சந்திரிகை'** என்னும் பெயர் கொண்ட ஒரு நூலை ஆக்கியுள்ளார். இதற்கு இப்பாடசாலையில் சேவைசெய்த திரு வீ. நடராசா ஆசிரியர் அவர்கள் அணிந்துரை கொடுத்துள்ளார்.

இந்தநூல் அழிந்துவிட்டது. பின்நாளில் நூல் சேர்ப் பதில் ஆர்வம்கொண்ட அறிஞர் அமரர் கனகசெந்திநாதன் அவர்களும் இந்தநூலை எடுத்துத்தரும்படி என்னைக் கேட்டார். நூல் பெறமுடியவில்லை. இந்தநூலில் ஒருபாடல் **'போகுதே புகைவண்டி போகுதே குபு குபு என்று சத்தம் போட்டு போகுதே'** இப்பாடலில் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு வரை உள்ள பிரதான புகையிரத நிலையங்களின் பெயர்கள் வரிசையாகப் பாடப்பட்டுள்ளன.

பாட்டில் ஒரு இடத்தில் **' சம்பு, குன்றம், சாலை, கொடி** என்று பாடியுள்ளார். இதில் **நாவற்குளி, சாவகச்சேரி, கொடிகாமம்'** ஆகிய மூன்றும் அடங்கும்.

நான் இப்பள்ளியில் படித்த காலத்தில் ஆண்வேடத்திலும், பெண் வேடத்திலும் பல நாடகங்களில் நடித்துள்ளேன் இலங்காதகனம், வலிதாங்கி, முதலான நாடகங்களில் பெண் வேடத்தில் நடித்துள்ளேன். அதிபர் அதற்கான பாடல்களை ஆக்கித்தருவார், பாடி நடிப்போம்.

நான் இசைக்கலைஞனாக வருவதற்கு நாடகக்கலையே ஆர்வத்தைத் தூண்டியது எனலாம். முத்தமிழ்க் கலைஞர் பூதத்தம்பி அதிபர் அவர்கள் கோலாட்டம், கும்மி, கரகம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காவடி , ஆட்டம் முதலானவற்றுக்கும் பாடல்கள் பல ஆக்கி யுள்ளார். இங்கிருந்து மண்டுவில் அம்மன் கோவிலுக்கும் , கச்சாய் அம்மன் கோயிலுக்கும் பக்கவாத்தியங்களுடன் செல்லும் காட்சி மிகச் சிறப்பாக இருக்கும். கச்சாய் அம்மன் கோயிலுக்குச் செல்லும் போது கொடிகாமச்சந்தியில் மரத்தில் கயிறுகட்டி காவடியுடன் ஒரு கையால் கயிறு பின்னி ஒழுங்காக அவுட்கும் காட்சி, பாட்டும் பக்கவாத்தியங்களும் சேர்த்து பரவசமூட்டும்.

இவருடைய நிகழ்ச்சி அந்நாளில் கொழும்பிலும் இரு தடவை முதற்பரிசு பெற்றது. இத்தகைய முத்தமிழ்க் கலைஞரின் பேரில் முன்பு நான் பாடிய விருத்தப் பாடல்கள்

**விருத்தம்**

1. நாவதனில் இயலிசை நாடகப் பாடல்
நாளுமே நடமாட வாழ்ந் திருந்தோன்
பாவதனை நினைத்தவுடன் ஆக்கி என்றும்
பார் மகிழ மேடைகளில் திகழ வைத்தோன்
தேவனெனப் போற்றிடவே வாழ்ந்த சீலர்
தெரிநெஞ்சங் களிலென்றும் நிறைந் திருப்போன்
பூவுலகி லழியாத பெருமை பூண்ட
பூதத்தம்பி யென்னு மாசானாமே.

2. மாணவரைத் தெரிந்தெடுத்து மகிழ்வோ டென்றும்
மாண்புமிகு நாடகங்கள் பழக்கி நிற்பார்
காணுபவர் வழிநீளம் தொடரப் பாட்டுக்
காவடிகள் கச்சா யம்மன் கோயிலேகப்
பூணவைத்த மலர்மாலை குலுங்கி ஆடப்
புதுமையென அனைவருமே மகிழ்ச்சி கொள்ளக்
கேணியடிப் பள்ளிதனிற் சேவை செய்தோன்
பூதத்தம்பி ஆசான் நாமம் வாழ்க! வாழ்க!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த அதிபரின் மனைவியாரும் இங்கு கற்பித்த ஆசிரியைகளுள் ஒருவராவர். நான் இப்பள்ளிக்குச் சென்ற முதல்நாள் ஒரு பத்திரிகையைக் காட்டி எழுத்துக்களைச் சொல்லும்படி கேட்டார். நான் அந்தவரி முழுவதையும் வாசித்துக் காட்டினேன். மகிழ்ச்சி கொண்ட அவர் ஒரு கற்கண்டுக் கட்டி எடுத்துவந்து என் வாயைத் திறக்கச் செய்து வாயினுள் வைத்தார். இன்றும் அதை நினைக்கும்போது மனதில் இனிக்கிறது.

இறையருளும் குருவாக்கும் கொண்டு தமிழிசைத் தொண்டின் முதற்படியாக 1964 இல் '**செந்தமிழ்க் கீதமாலை**' என்ற நூலை ஆக்கினேன். அமரர் பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்கள் அணிந்துரை தந்து சிறப்பித்தார். பலரும் விரும்பி இந்நூலை வாங்கினார்கள், இப்போதும் நான் நான்காவது நூலாக '**மழலைகள் கீதமாலை**' என்னும் நூலை ஆக்கியுள்ளேன்.

ஆரம்பக்கல்வி தென்மராட்சி, கல்வி வலயம் தென்மராட்சி, உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு ஸ்ரீஸ்கந்தராஜா அவர்கள் அணிந்துரை ஈந்து சிறப்பொடு திகழ வைத்தார். அவர்களுக்கு எனது பெரும் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இந்த நூலுக்கு என் பேரன்புக்குரிய பெரியோரான வித்துவான் வே. ஆறுமுகம் அவர்கள் வாழ்த்துரை ஈந்து சிறப்பித்துள்ளார். அவருக்கும் என் நன்றியையும், வணக்கத்தையும் தெரிவிக்கிறேன்.

யாழ்ப்பாணம் மாநகரசபை பொது நூலகத்தில் நூலகராகப் பணிபுரியும் மருமகன் திரு. வே. வித்தியானந்தன் அவர்கள் '**மழலைகள் கீதமாலை**' அழகோடு விளங்க அட்டைப்படம் வரைந்து தந்துதவினார். அவருக்கும் மிக்க நன்றியைத் தெரிவிப்பதோடு இந்நூலை அச்சுவாகனமேற்றிச் சிறப்புறச் செய்த பாரதி பதிப்பகத்தாருக்கும் எனது அன்புமிகு நன்றியைத் தெரிவிக்கிறேன்.

'என்கடன் பணி செய்வதே'

அன்பன்
அ. கி. ஏரம்பமூர்த்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | அன்னை தந்தை பாதம் கும்பிடுவோம் | 01 |
| 2. | சின்னஞ்சிறிய பிள்ளைகள் நாம் | 02 |
| 3. | ஆட்டுக்குட்டி | 03 |
| 4. | மாம்பழம் | 04 |
| 5. | கோழி | 05 |
| 6. | பந்து | 06 |
| 7. | சின்னத்தம்பி | 07 |
| 8. | பம்பரம் | 08 |
| 9. | பட்டம் பறக்குது பார் | 09 |
| 10. | பாட்டுப் பாடுவோம் | 10 |
| 11. | எங்கள் வீட்டுப் பூனைக்குட்டி | 11 |
| 12. | புள்ளி ஆடு ஈன்ற குட்டி | 12 |
| 13. | முயற்குட்டி | 13 |
| 14. | நான் வளர்க்கும் நாய்க்குட்டி | 14 |
| 15. | கீரிப்பிள்ளை | 15 |
| 16. | வரிசையாக எறும்பு செல்லும் | 16 |
| 17. | அழகு மிக்க வெண்ணிலா | 17 |
| 18. | வண்ணத்துப்பூச்சி | 18 |
| 19. | கொக்கு பறக்குது. | 19 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20. கோழி தரும் பாடம் 20

21. வெள்ளைப் பசு 21

22. பச்சை நிறக்கிளியே 22

23. மாரிகால இரவில் தவளை 23

24. புள்ளிமான் குட்டி 24

25. வண்டியிலே 25

26. அணிற்பிள்ளை 26

27. ஆனைக் குட்டி 27

28. கன்னித்தமிழ்ப் பாப்பா 29

29. காவடி ஆட்டம் 30

30. கரகங் கரகம்மா முத்துமாரி 32

31. பூனையாரின் பேராசை 34

32. மயிலாரும் குயிலாரும் 36

33. வண்ண மயிலும் ஆடுது 38

34. ஆனையும் பன்றியும் 39

35. சின்னச்சின்னப் பாலர் நாங்கள் 41

36. நாமகளின் சேவடியைப் பாடிடுவோமே 43

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1. அன்னை தந்தை பாதம் கும்பிடுவோம்



1. அன்னை தந்தை பாதம் கும்பிடுவோம்
என்றுமிவர்களைப் போற்றிடுவோம்.

2. இன்பமுடன் நாங்கள் வாழ்ந்திடவே எண்ணும்
அன்பு மனத்திற்கு ஈடுமுண்டோ.

3. கண்கண்ட தெய்வமெமக்கிவரே - இதை
எண்ணிமிக அன்பு செய்திடுவோம்.

4. நல்லவராக நடந்திடுவோம் - இவர்
சொல்லினைப் பொன்னென ஏற்றிடுவோம்.

5. வல்லவராக வளர்ந்திடுவோம் - உயர்
கல்விதனை நன்கு கற்றிடுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. சின்னஞ்சிறிய பிள்ளைகள் நாம்



1. சின்னஞ்சிறிய பிள்ளைகள் நாம்
சிறப்புமிக்க பிள்ளைகள் நாம்
பென்னம்பெரிய செயல் புரியப்
பிறந்திருக்கும் பிள்ளைகள் நாம்.

2. அன்னை தந்தை ஆசிரியர்
அன்பாய்க் கூறும் போதனைகள்
பொன்னெனவே தினமும் போற்றிப்
பூமியிலே நலம் பெறுவோம்.


3. நல்லவர்களோடு சேர்ந்து
நற்பழக்கம் கொண்டிடுவோம்
நல்ல நூல்களைப் படித்து
நல்லறிவு பெற்றிடுவோம்.

4. வல்லவர்க ளாய் வளர்ந்து
விரும்ப நன்மை செய்திடுவோம்
எல்லையில்லாக் கருணை கொண்ட
இறைவன் பாதம் தொழுதிடுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# 3. ஆட்டுக்குட்டி



1. ஆட்டுக்குட்டி ஆட்டிக்குட்டி
எங்கே போகிறாய்
காட்டுப் பக்கம் ஓடிச்சென்று
குளைகள் தின்னப் போகிறேன்.



2. பூனைக்குட்டி பூனைக்குட்டி
எங்கே போகிறாய்
பாலிருக்கும் சட்டிதேடிப்
பால்குடிக்கப் போகிறேன்.



3. சிற்றெறும்பே சிற்றெறும்பே
எங்கே போகிறாய்
சுறுசுறுப்பாய் எங்கும் சென்று
உணவு தேடப் போகிறேன்.




4. தேனியாரே தேனியாரே
எங்கே போகிறாய்
தாவிப்பறந்து பூக்களிலே
தேனெடுக்கப் போகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4. மாம்பழம்



1. மாம்பழம் பார் மாம்பழம்
மதுரமான மாம்பழம்
மாம்பழம் பார் மாம்பழம்
மஞ்சள் நிற மாம்பழம்

2. மாம்பழம் பார் மாம்பழம்
மாமா தந்த மாம்பழம்
மாம்பழம் பார் மாம்பழம்
மாமி தந்த மாம்பழம்

3. மாம்பழம் பார் மாம்பழம்
மணம் மிகுந்த மாம்பழம்
மாம்பழம் பார் மாம்பழம்
மளமள வென்று தின்னுவேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5. கோழி



1. கொக்கரக்கோ கொக்கரக்கோ கோழி கோழி
குப்பையைக் கிளறுவதேன் கோழி கோழி

2. கொக்கரக்கோ கொக்கரக்கோ கோழி கோழி
கூடையிலே நெல்லிருக்கு கோழி கோழி

3. கொக்கரக்கோ கொக்கரக்கோ கோழி கோழி
குஞ்சுகளைக் கூட்டிவா வா கோழி கோழி

4. கொக்கரக்கோ கொக்கரக்கோ கோழி கோழி
கூட்டமுடன் ஓடி வாவா கோழி கோழி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6. பந்து



1. வட்டமான பந்து
வடிவுமிக்க பந்து
எட்டி எட்டிக் குதிக்கும்
என்னுடைய பந்து

பட்டணத்து மாமா
வாங்கி வந்த பந்து
கிட்டுவுக்கு மொன்று
கிளியின் நிறப்பந்து

பெட்டியிலே வைப்பேன்
பெரிய நல்ல பந்து
கெட்டிக்காரன் என்றே
பட்ட மெடுப்பேனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7. சின்னத்தம்பி





1. சின்னத்தம்பி சின்னத் தம்பி வாவாவா
சிவன்கோயில் போய்வரலாம் வாவாவா
மின்னும் நல்ல சம்பரமாம் வாவாவா
மேளமொடு நாதஸ்வரம் வாவாவா

2. பூங்காவனம் பார்ப்போம் வாவாவா
புதுமையான சோடினையாம் வாவாவா
ஆங்காங்கு கடைகளுண்டு வாவாவா
அழகுப் பொம்மை வாங்கிடலாம் வாவாவா

3. காசுகொண்டு நான்வருவேன் வாவாவா
கடலை மிட்டாய் வாங்கிடுவோம் வாவாவா
ஈசனை நாம் கும்பிடுவோம் வாவாவா
இன்பம் மிகப் போற்றிடுவோம் வாவாவா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8. பம்பரம்



1. தம்பி இங்கே ஓடிவா
பம்பரத்தைப் பார் பார்

2. பச்சைநிறக் கோடு பார்
மிக்க நிறம் மஞ்சள் தான்

3. நின்ற இடத்தில் சுற்றுது
பின்பு நிலத்தில் சாயுது

4. கண்டு நாங்கள் களிப்போம்
கண்ணனுக்கும் காட்டுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 9. பட்டம் பறக்குது பார்



1. பட்டம் பறக்குது பார் வானத்திலே
   பட்டம் பறக்குது பார்

2. வெட்டவெளியிலே எட்டு மூலைப்பட்டம்
   கெட்டித்தனமாகச் சுற்றித் திரியுதே
   பட்டம் பறக்குது பார்

3. கட்டிய வாலுடன் கடுகதியாகவே
   முட்டிய காற்றது மேலே எழுப்பிட
   பட்டம் பறக்குது பார்

4. கூவிக்கூவி அங்கு சுற்றுது பார்
   தாவித்தாவி அங்கு போகுது பார்
   பட்டம் பறக்குது பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10. பாட்டுப் பாடுவோம்





1. பாட்டுப் பாடுவோம் நாங்கள்
   பாட்டுப் பாடுவோம்
   கூட்டமாகக் கூடி நின்று
   பாட்டுப் பாடுவோம்



2. கூத்து மாடுவோம் நாங்கள்
   கூத்து மாடுவோம்
   நேர்த்தியாகத் துள்ளித் துள்ளிக்
   கூத்து மாடுவோம்

3. ஓடி விளையாடுவோம் நாம்
   ஓடி விளையாடுவோம்
   கூடிவரிசையாக நின்று
   ஓடி விளையாடுவோம்



4. ஊஞ்சலாடுவோம் நாம்
   ஊஞ்சலாடு வோம்
   வாஞ்சையோடு நாமமர்ந்து
   ஊஞ்ச லாடுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 11. எங்கள் வீட்டுப் பூனைக்குட்டி



1. எங்கள் வீட்டுப் பூனைக் குட்டி
எனது அன்புப் பூனைக்குட்டி
எங்குமோடும் பூனைக்குட்டி
எலி பிடிக்கும் பூனைக்குட்டி


2. பால் குடிக்கும் பூனைக்குட்டி
பதுங்கும் நல்ல பூனைக்குட்டி
வால் கறுத்த பூனைக்குட்டி
வடிவு மிக்க பூனைக்குட்டி

3. மீயா மீயா என்று கத்தி
மடியிலேறும் பூனைக்குட்டி
வாயால் நக்கும் பூனைக்குட்டி
வளர்க்க நல்ல பூனைக்குட்டி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 12. புள்ளி ஆடு ஈன்ற குட்டி



1. புள்ளி ஆடு ஈன்ற குட்டி ஒன்று - அது
   துள்ளித்திரியும் மிக அழகாய்

2. சாய்ந்து மரங்களில் துள்ளி ஏறும் - பின்பு
   பாய்ந்து குதிக்கும் பயமின்றியே

3. முட்டவரும் மிகுவேகமதாய் - நானும்
   கிட்டச் சென்றாலது ஓடிவிடும்


4. துள்ளத்துள்ள அதில் ஆசையம்மா - என்றும்
   கள்ளங்கபடங்கள் இல்லையம்மா

5. மெள்ளப்பிடித்து அணைத்திடுவன் முத்தம்
   உள்ளம் மகிழ்ந்து கொடுத்திடுவேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 13. முயற்குட்டி



சீமை வெள்ளை முயற்குட்டி
சிவப்பு கண்ணன் முயற்குட்டி
தீமை செய்யா முயற்குட்டி
துள்ளி ஓடும் முயற்குட்டி

பஞ்சுமேனி முயற்குட்டி
பளபளக்கும் முயற்குட்டி
அஞ்சி ஓடும் முயற்குட்டி
அணைக்க நல்ல முயற்குட்டி

குழியைத் தோண்டும் முயற்குட்டி
குழையைத் தின்னும் முயற்குட்டி
அழகுக்காது முயல்க்குட்டி
அன்பாய் வளர்க்கும் முயற்குட்டி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 14. நான் வளர்க்கும் நாய்க்குட்டி



1. சின்னஞ்சிறு நாய்க் குட்டி
சிங்கார நாய்க் குட்டி
பொன்னைப் போலும் நாய்க்குட்டி
புதுமையான நாய்க்குட்டி

2. துள்ளிவரும் நாய்க்குட்டி
துணைக்கு நல்ல நாய்க்குட்டி
கள்ளமில்லா நாய்க்குட்டி
கருணை மிக்க நாய்குட்டி

3. வாலை ஆட்டும் நாய்க்குட்டி
வந்து நக்கும் நாய்க்குட்டி
வேலை செய்யும் நாய்க்குட்டி
வீட்டைக் காக்கும் நாய்க்குட்டி

4. என்றும் மெனது நாய்க்குட்டி
எதற்கு மஞ்சா நாய்க்குட்டி
நன்றி உள்ள நாய்க்குட்டி
நான் வளர்க்கும் நாய்க்குட்டி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 15. கீரிப்பிள்ளை



1. கீரிப்பிள்ளை ஓடுதே
கீகீ என்று கத்துதே
சீறும் பெரிய நாகத்தைச்
சீக்கிரமாய் மறிக்குதே


2. இரண்டும் சண்டை செய்யுதே
இங்குமங்கும் பாயுதே
சுருண்டு சுருண்டு நாகமும்
சீறிச் சீறிக் கொத்துதே

3. தாவித் தாவிக் குதிக்குதே
தலையைத் துண்டாய்க்கடிக்குதே
காவிக் கொண்டே ஓடுதே
களிப்பினாலே நடிக்குதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 16. வரிசையாக எறும்பு செல்லும்



1. வரிசையாக எறும்பு செல்லும்
வடிவுதனைப் பார் பார்
பெரிய கூட்ட மாகச் செல்லும்
புதுமைதனைப் பார் பார்

2. ஒற்றுமையாய் உணவைக் கொண்டு
செல்வதை நீ பார் பார்
சுற்றமுடன் சேர்ந்து வாழும்
தன்மை தனைப் பார் பார்

3. சோம்பல் இன்றிச் சுறுசுறுப்பாய்ச்
சேர்ந்துழைத்தல் பார்பார்
நாம் இது போல் சேர்ந்துழைப்போம்
நன்மை ஓங்கும் பார்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 17. அழகு மிக்க வெண்ணிலா



1. அழகு மிக்க வெண்ணிலா
   ஆசை காட்டும் வெண்ணிலா
   பழகி விளையாடவே
   பக்கத்திலே வா வா

2. வான வீதி தன்னிலே
   வந்து வந்து மறைகிறாய்
   மோன மாகப்பார்க்கிறாய்
   மோடி காட்டிச் சிரிக்கிறாய்


3. சிறுத்துச் சிறுத்துப் போகிறாய்
   பெருத்துப் பெருத்து வருகிறாய்
   நிறைந்த வட்ட வடிவமாய்
   நின்று மகிழ்ச்சி தருகிறாய்

4. எந்தநாளு முன்னையே
   எதிரில் பார்க்க ஆசையே
   சிந்தை மகிழக் காட்சிதா
   சீக்கிரமாய் ஓடிவா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 18. வண்ணத்துப் பூச்சி



1. வண்ண வண்ணப் பூவைத்தேடும்
வண்ணத்துப் பூச்சி
கண்ணைக் கவரும் அழகு கொண்ட
வண்ணத்துப் பூச்சி

2. தேனைக் குடித்து மகிழுகின்ற
வண்ணத்துப் பூச்சி
காணக்காண ஆசையம்மா
வண்ணத்துப் பூச்சி


3. புள்ளிப் புள்ளிச் செட்டை கொண்ட
வண்ணத்துப் பூச்சி
உள்ளம் மகிழ இங்கு வாவா
வண்ணத்துப் பூச்சி

4. அடித்துத் துன்பம் செய்ய மாட்டோம்
வண்ணத்துப் பூச்சி
பிடித்திடாமல் பார்த்து மகிழ்வோம்
வண்ணத்துப் பூச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 19. கொக்கு பறக்குது



1. கொக்கு பறக்குது கொக்கு பறக்குது
மிக்க பசியோடு நீரிலிறங்குது
பக்கத்திலே வந்த குஞ்சுமீன் கூட்டத்தைப்
பாராதது போலத் தூக்கமாய் நிற்குது

2. பார்த்த பெருமீன்கள் பயமேது மில்லாமல்
பக்கத்திலே நீந்தும் வேளையிலே
கூர்மிக்க சொண்டினால் கொத்தி விழுங்கியே
நீர்க்கரை மரத்தில் ஓய்வாய் இருக்குது

3. ஆரவார மின்றிக் காரியத்திற் கண்ணாய்
என்று முயர்வை அடைந்திடுவோம்
பாரினிலே சிறப்பாக வாழ்ந்திடுவோம்
பண்பாய்ப் பலர்க்கு முதவிசெய்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 20. கோழி தரும் பாடம்





1. கொக்கரக்கோ எனக்கூவும் கோழிச்சேவல்
கொக்கொக்கொக் என்று கத்தும் பேட்டுக்கோழி
மிக்கராசா போலச் சேவற் கோழி முன்னாலே
மிடுக்காகவே நடந்து செல்வதழகுதான்

2. குப்பையை நன்றாய்க் கிளறிப் பேட்டுக்கோழி
குஞ்சுகளைக் கூப்பிடுதே ஏனென்று பார்ப்போம்
குப்பைக்குள்ளே மறைந்திருக்கும் உணவுவகைகளைக்
காட்டிக் கொத்தித் தின்ன வைக்கும் காட்சியைக்
காண்போம்


3. புத்தகங்களைப் புரட்டி ஆசிரியர் இதுபோல்
புதியபுதியவிடயங்களைச் சொல்லியே தருவார்
முத்தான கல்வியினால் நற்பயனடைவோம்
மேலான நல்லறிவால் நற்செயல் புரிவோம்

4. ஆசிரியர்களை என்றும் போற்றி செய்குவோம்
அவர் தந்திடும் வாழ்த்து உயர்வைத் தந்திடும்
நேசமாக எமைவளர்க்கும் தாய் தந்தையே
நேரினிலே கண்கண்ட தெய்வமுமவரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 21. வெள்ளைப் பசு



1. வெள்ளைப் பசு வெள்ளைப்பசு
நாம் வளர்க்கும் வெள்ளைப்பசு
கள்ளமில்லா வெள்ளைப் பசு
கட்டி வளர்க்கும் எங்கள் பசு

2. பால் கறந்து குடித்திடுவோம்
பசும்புல்தவிடு உண்ணவைப்போம்
கால் தூக்கித் துள்ளித் துள்ளிக்
கன்றும் வந்து புல்லை உண்ணும்

3. தடிகொண்டடிக்க மாட்டோம்
தடவித்தடவி அணைத்திடுவோம்
வெடிச்சத்தம் கேட்டு விட்டால்
வெருண்டு வெருண்டு துள்ளிநிற்கும்

4. அருஞ்செல்வ மான பசு
அம்மா அம்மா என்று கத்தும்
பெரும் பாவம் பசுவைக் கொன்று
உண்பவரை நாம் வெறுப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 22. பச்சைநிறக் கிளியே



1. பச்சை நிறக்கிளியே வாவாவா
பாலும் சோறும் நான்தருவேன் வாவாவா
அச்சமின்றி என்னுடனே வாவாவா
அனுதினமும் பழம் தருவேன் வாவாவா


2. கொவ்வைப் பழம் போன்ற அழகுச் சொண்டினைக்
கொண்டாய்
கொத்தித் தின்னவே நிறைந்த தானியம் தருவேன்
அவ்வைப்பாட்டி பாடல்களும் சொல்லித்தருவேன்
அழகான நம்தமிழில் பாட்டுப் பாடலாம்

3. சோலை எங்கும் நீ பறந்து அலைந்திட வேண்டாம்
சோர்ந்து பசியாற் கவலை கொண்டிட வேண்டாம்
காலை மாலை கடவுள் நாமம் என்றும் சொல்லுவாய்
காத்திடுவாய் எம்மை என்று நம்பித்துதிப்பாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 23. மாரிகால இரவில் தவளை



1. மாரிகால இரவில் தவளை மத்தளம் வாசிக்கும்
ஊரில் உள்ளோர் காதில் கும்கும் என்று கேட்கும்
சேர்ந்து பொந்தில் இருக்கும் தவளை கொறக்கொறக்
என்னும்
சரிந்து தூக்கத் திருப்பவர்க்குத் தாலாட்டுமாகும்


2. சில்வண்டு சில்சில் என்று குழலை வாசிக்கும்
செலவு இதற்கு எதுவுமின்றிக் கச்சேரி நடக்கும்
வல்ல இவர்களைப் புகழ யாருமே இல்லை இன்று
வாரும் நாங்கள் சேர்ந்து நின்று வாழ்த்துக் கூறுவோம்

3. சோலை தன்னில் பகலில் மந்திகுதித்து நடனமாடும்
சிறப்புக்கண்டு குருவிஇனம் ஆரவாரம் செய்யும்
கோலமயில் சிறகைவிரித்து நடனமுமாடும்
கூடிக் குயில்கள் இசைபாடி இன்புறச் செய்யும்

4. எல்லை இல்லாச் சேவைதன்னை நாளுமே கண்டும்
இதனை நன்கு சிந்திப்பவர்கள் யாருமே இல்லை
வல்ல இவர்களைப் புகழப் புதுமையாகவே இன்று
வாரும் நாங்கள் சேர்ந்து நின்று வாழ்த்துக் கூறுவோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 24. புள்ளிமான் குட்டி



1. புள்ளிமான் குட்டி புள்ளி மான் குட்டி
துள்ளித் துள்ளி விளையாடும் புள்ளிமான் குட்டி
கள்ளமில்லாமல் திரியும் புள்ளிமான் குட்டி
காட்டுக்குளையும் புல்லும் தின்னும் புள்ளிமான் குட்டி


2. தூக்கியே நான் விளையாடும் புள்ளிமான் குட்டி
துரிதமாகவே ஓடும் புள்ளிமான் குட்டி
தாக்கும் நாயைக்கண்டால் ஓடும் புள்ளிமான் குட்டி
தினமும் கவனமாய் வளர்க்கும் புள்ளிமான் குட்டி

3. வள்ளி என்னும் பெயரைக் கொண்ட புள்ளிமான் குட்டி
வெள்ளத்திலே நீந்திவந்த புள்ளிமான் குட்டி
உள்ளத்திலே அன்புகொண்ட புள்ளிமான் குட்டி
உயர்ந்த நல்ல குணமுடைய புள்ளிமான் குட்டி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 25. வண்டியிலே



1. வண்டியிலே பாரந்தன்னைக்
கொண்டுவரும் மாட்டினைப்பார்
தொண்டு மனிதருக்காய்ச் செய்து
வாழுகின்ற தன்மையைப் பார்

2. வயல்களிலே நெல்விதைக்க
உழுதுதரும் தன்மையைப் பார்
வாட்டமின்றி நாங்கள் வாழ
வைக்கும் அவற்றின் சேவையைப் பார்

3. புல்லு வைக்கோல் தவிடும் நீரும்
பருகவைத்து வளர்த்திடுவோம்
வல்லமையாய்த் தொழிலைச் செய்து
வளம் பெருக வைத்திடுவோம்

4. அன்பாய் வளர்த்த மாடுகளைக்
கொன்று தின்போர் தீயவரே
என்பதை நாம் நன்குணர்வோம்
என்று மன்புடன் வளர்ப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 26. அணிற் பிள்ளை




1. கத்திக் கத்தி மரத்திலேறும் அணிற்பிள்ளையே
கனிதருவேன் வா வா வா அணிற்பிள்ளையே
மெத்த உயரக் கொப்பிலேறும் அணிற்பிள்ளையே
முதுகில்க் கோடு போட்டதார் சொல் அணிற் பிள்ளையே

2. காய் கனியை விரும்பி உண்ணும் அணிற் பிள்ளையே
கிட்ட ஓடிவந்திடுவாய் அணிற்பிள்ளையே
நாய் பூனை பிடித்திடாமல் அணிற்பிள்ளையே
நான் வளர்ப்பேன் நீவருவாய் அணிற்பிள்ளையே

3. கொய்யாப்பழம் தருவேன் அணிற்பிள்ளையே
கூடவே சோறும் தருவேன் அணிற்பிள்ளையே
மெய்யாய் அடித்து வருத்தமாட்டேன் அணிற் பிள்ளையே
மிகவிரைவாய் வந்திடுவாய் அணிற்பிள்ளையே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 27. ஆனைக்குட்டி



1. ஆனைக்குட்டி ஆனைக்குட்டி
சுனாமி கொண்டு வந்தது
ஆனந்த மாயே ஐயனார்
கோயிலிலே நிற்குது

2. வாழைப்பழம் கரும்பு கொடுக்க
வாங்கி வாங்கி உண்ணுது
கூழையான வாலினாலே
வீசி ஈயை விரட்டுது


3. தும்பிக்கையைத் தூக்கித் தூக்கித்
துரிதமாக ஆட்டுது
கும்பலாகச் சிறுவர் சென்றாற்
கவன மாகப் பார்க்குது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. சுளகு போன்ற காதை ஆட்டிச்
சிறிய கண்ணாற் பார்க்குது
குளை கொடுத்தால் வாங்கி உடனே
வாயினுள்ளே வைக்குது.

5. கரியமேனி கொண்டது அதன்
கால் உரலைப் போன்றது
சிறிய மணியும் கழுத்தில் இருந்து
சிறந்த ஓசை தருகுது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 28. கன்னித்தமிழ்ப் பாப்பா



1. கன்னித் தமிழ்ப் பாப்பா
கட்டிக் கொஞ்சும் பாப்பா
சின்னப் பல்லைக் காட்டிச்
சிரிக்கும் எங்கள் பாப்பா

2. கையை நீட்டி உயர்த்தி
தூக்க வைக்கும் பாப்பா
பையப் பைய நடந்து
பழகும் எங்கள் பாப்பா


3. மழலை மொழி பேசி
மகிழ வைக்கும் பாப்பா
குழலும் யாழும் போலக்
குரல் இனிய பாப்பா

4. அழுது நிற்கும் வேளை
அன்புடனே தூக்க
அழகு முகம் மலர
அணைத்து மகிழ் பாப்பா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 29. காவடி ஆட்டம்



1. ஆறுமுகன் வேலனுக்குக் காவடி ஆட்டம்
ஆனை முகன் தம்பிக்குக் காவடி ஆட்டம்
ஏறி மயிலில் வருபவற்குக் காவடி ஆட்டம்
எங்கும் நிறைந்த முருகனுக்குக் காவடி ஆட்டம்

2. சரவண பவனாற்குப் பால்க்காவடி
சஞ்சலம் தீர் முருனுக்குப் பால்க்காவடி
குருவாய் வந்த குமரனுக்குப் பால்க்காவடி
குன்றிலாடும் குகனுக்கு பால்க்காவடி

3. தேவர் துயர் தீர்த்தவற்குப் பன்னீர்க்காவடி
தெய்வயானை நாதனுக்குப் பன்னீர்க்காவடி
பாவமனைத்தும் தீர்ப்பவற்குப் பன்னீர்க்காவடி
பரனுமையாள் பாலனுக்குப் பன்னீர்க்காவடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. சூரனைச் சங்கரித்தவற்குப் புஸ்பக்காவடி
தெய்வயானை நாதனுக்குப் புஸ்பக்காவடி
நாரணனின் மருகனுக்குப் புஸ்பக்காவடி
நலமனைத்தும் தருபவற்குப் புஸ்பக்காவடி

5. வேடன் விருத்தனானவற்குப் பாட்டுக்காவடி
வள்ளியம்மை நாதனுக்குப் பாட்டுக்காவடி
நாடியவன் தாள் பணிந்தே பாட்டுக்காவடி
நாமாடி நலம்பெறுவோம் பாட்டுக்காவடி.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 30. கரகங் கரகமம்மா முத்துமாரி



1. கரகங் கரகமம்மா முத்துமாரி
காரணியே தாள்பணிந்தோம் முத்துமாரி
அரனாரின் சக்தியம்மா முத்துமாரி
அம்பிகையே காருமம்மா முத்துமாரி

2. நாரணனின் சோதரியே முத்துமாரி
நலமனைத்தும் தந்திடுவாய் முத்துமாரி
பூரணியே காருமம்மா முத்துமாரி
புதுமைமிகக் கொண்டவளே முத்துமாரி

3. உடுக்கையொடு வாள்கொண்டாய் முத்துமாரி
உம்பர் தொழுமம்பிகையே முத்துமாரி
அடியவரைக் காப்பவளே முத்துமாரி
அற்புதம் பலபுரிந்தாய் முத்துமாரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. தீராத நோயனைத்தும் முத்துமாரி

தீர்த்தருளும் சக்திநீயே முத்துமாரி

ஆராதனை செய்தோம் முத்துமாரி

அதிவிரைவாய் வந்திடுவாய் முத்துமாரி

5. நேராக வந்திடுவாய் முத்துமாரி

நித்தமுமே தாள்பணிந்தோம் முத்துமாரி

பாரோர் நலம்பெறவே முத்துமாரி

பரிந்தருள் தருபவளே முத்துமாரி

6. அற்புதம் நிறைந்த சக்தி சிவமுத்துமாரி


அடியவரைக் காப்பவளே சிவமுத்து மாரி

பொற்திருப்பா தமதுதித்தோம் சிவமுத்துமாரி

வெற்றி எதிலும் தருவாய் சிவமுத்துமாரி

சிவ முத்துமாரி சிவ முத்துமாரி/

சிவ முத்துமாரி சிவ முத்துமாரி /






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31. பூனையாரின் பேராசை





1. வரியைக் கொண்ட வேங்கைப் புலியைப்
பூனையாரும் பார்த்திட்டார்
பூனையாரும் பார்த்திட்டார்

2. பெரிய ஆசை கொண்டு அவரும்
வரியைப் போட நினைத்திட்டார்
வரியைப் போட நினைத்திட்டார

3. நரியனாரை நாடிச் சென்று
விருப்ப மதனைத் தெரிவித்தார்
விருப்ப மதனைத் தெரிவித்தார்

4. சிரித்துக் கொண்டு கபடநரியார்
சீராய்ச் செய்யலாமென்றார்
சீராய் செய்யலாமென்றார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. குள்ள நரியார் கொல்லனிடத்தில்
கூட்டியே தான் சென்றிட்டார்
கூட்டியே தான் சென்றிட்டார்

6. மெள்ளக் கண்ணை மூடச்செய்து
சூட்டுக்கோலால் சுடவைத்தார்
சூட்டுக்கோலால் சுடவைத்தார்

7. சூடுபட்ட பூனையாரோ
கத்திக் கத்தி ஓடினார்
கத்திக் கத்தி ஓடினார்

8. கேடு பெரிய ஆசையாலே
வந்த தென்று அறிந்திட்டார்
வந்த தென்று அறிந்திட்டார்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 32. மயிலாரும் குயிலாரும்






மயிலார்:-

குயிலாரே குயிலாரே இங்குவாரும்
அழகாக என்னைப் போல ஆடுவீரா
அழகாக என்னைப்போல ஆடுவீரா

குயிலார்:-

ஓ கோ கோ அப்படியா
ஓ கோ கோ அப்படியா
மயிலாரே மயிலாரே இங்கு வாரும்
இனிதாக என்னைப் போலப் பாடுவீரா
இனிதாக என்னைப் போலப் பாடுவீரா



மயிலார்:-

ஓகோ ஓகோ அப்படியா
ஓகோ கோ அப்படியா
பசுவாரே பசுவாரே இங்குவாரும்
குயிலார் தன்னைப் புகழ்ந்து பாட்டுப் பாடுறார்
குயிலார் தன்னைப் புகழ்ந்து பாட்டுப் பாடுறார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குயிலார்:-

பசுவாரே பசுவாரே இங்குவாரும்
மயிலார் தன்னைப் புகழ்ந்து ஆட்டமாடுறார்
மயிலார் தன்னைப் புகழ்ந்து ஆட்டமாடுறார்

பசுவார்:-

மயிலாரே குயிலாரே சண்டைவேண்டாம்
மற்றவரின் திறமைதனை நன்கு மதிப்பீர்
எல்லோரும் எவற்றினிலோ வல்லவரேதான்
நல்லவராய் நாம் வாழ்ந்து நற்பணிபுரிவோம்
நல்லவராய் நாம் வாழ்ந்து நற்பணிபுரிவோம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 33. வண்ண மயிலும் ஆடுது



1. மலையின் மேலே முகிலைக் கண்டு
வண்ண மயிலும் ஆடுது
வட்டமாகத் தோகை விரித்து
வண்ண மயிலும் ஆடுது

2. காலைத் தூக்கித் துள்ளித் துள்ளி
கான மயிலு மாடுது
காட்டில் உள்ள பறவை எல்லாம்
கத்தித் தாளம் போடுது.



3. கொல்லும் வேடன் வில்லை எறிந்து
குனிந்து குனிந்து பார்க்கிறான்
கோல மயிலின் அழகைக் கண்டு
குறத்தி நின்று சிரிக்கிறான்.

4. மந்திக்கூட்டம் மரத்தில் இருந்து
மயிலின் ஆட்டம் பார்க்குது
மதுரமாகக் குயில்கள் கூவி
மகிழ்ச்சியாகப் பார்க்குது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 34. ஆனையும் பன்றியும்

1. காலையிலே ஆனை ஒன்று
குளித்து விட்டு வந்தது
கடவுளப் பூசைக்காகக் கையில்
பூவுங் கொண்டு வந்தது.

2. பாலமொன்றில் வரும்போது
பன்றியொன்றும் வந்தது
பார்த்து அதனை ஒதுங்கி நின்று
பன்றிக்கு வழி விட்டது

3. ஆரவாரம் செய்து பன்றி
ஆனை எனக்குப் பயந்து தான்
அடங்கி ஒடுங்கிச் செல்கிறது
அதனைப் பாரீரென்றது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. சீரமைந்த பசுவுமொன்று
ஆனையிடம் சென்றது
சிறிய பன்றிக் கொதுங்கி நின்ற
காரணத்தைக் கேட்டது

5. சேறு பூசி நானுமந்தப்
பன்றியிலே கால்பட்டால்
சிறிய பன்றி இறந்து போகும்
சேறென்னிலே படுமென்றது

6. கூறிய இக்கதையைப் போலக்
கெட்டவர்கள் நெருங்கினால்
கூடியவரை ஒதுங்கி நின்று
பெருமைசேர வாழுவோம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 35. சின்னச்சின்னப் பாலர் நாங்கள்



1. சின்னச் சின்னப் பாலர் நாங்கள்
சிங்கார மாய்ச் சேர்ந்திடுவோம்
வண்ண வண்ணப் பூவெடுத்து
வந்து நாங்கள் சேர்த்திடுவோம்

2. மல்லிகையின் மலரெடுத்து
மாலை நாங்கள் கட்டிடுவோம்
நல்ல றோசா மலர் எடுத்து
நடுவிலே நாம் சேர்ந்திடுவோம்

3. புள்ளிமானைப் போல நாங்கள்
புதுமையாகச் சென்றிடுவோம்
துள்ளி விளையாடி நாங்கள்
துரிதமாகச் சென்றிடுவோம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. காவடிகள் கொண்டுநாங்கள்
கோயிலுக்குச் சென்றிடுவோம்
சேவடியைத் தொழுதிடுவோம்
சேர்ந்து வீதி சுற்றிடுவோம்

5. பால் கொண்டு சென்றிடுவோம்
பக்தியொடு ஊற்றிடுவோம்
வேல் கொண்ட முருகனிடம்
வேண்டும் வரம் பெற்றிடுவோம்

6. அமைதியாக அங்கு நின்று
அன்புடனே வணங்கிடுவோம்
எமது நல்ல செயலைக் கண்டு
இறைவ னருளைத் தந்திடுவார்

7. தேர்கண்டு மகிழ்ந்திடுவோம்
தெய்வபக்தி அங்கு ஓங்கும்
சீர்கண்டு திரும்பிடுவோம்
சீக்கிரமாய் வீடுசெல்வோம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கும்மி

# 36. நாமகளின் சேவடியைப் பாடிடுவோமே



நாமகளின் சேவடியைப் பாடிடுவோமே
கூடியே கும்மி கொட்டிப் பாடிடுவோமே

கானவீணை மாலை ஏடு கைகளில் கொண்டாள்
கமல மலர்மீதமர்ந்து கானமிசைப்பாள்

பாவலரெல்லாம் பாடிவணங்கும்
பாமகள் அருள்பெருகப் பாடிடுவோமே

கம்பனுக்குகாற் சிலம்பு ஒன்று கொடுத்தாள்
காளமேகம் அமரஅரி ஆசன மீந்தாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழவியாகவே கொட்டிக் கிழங்கு சுமந்தே
தோற்றினாள் அருள்பாடி ஆடிடுவோமே

நான்முகனின் சக்தியாகி நாவிலமர்ந்தாள்
நயந்து துதி செய்பவர்க்கு கலைகளை ஈவாள்

கந்தருவர்கள் நிதமும் கானமிசைத்தே
போற்றி செய்யும் வாணி புகழ்பாடிடுவோமே.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அ. கி. ஏரம்பமூர்த்தி

தமிழ்நாடு சிதம்பரம்
உயர்நிலைப் பள்ளி முன்னாள்
தலைமைத் தமிழாசிரியர்
வித்துவான் வேதவனம் ஆறுமுகம்
அவர்கள்

# உவந்தளித்த பதிகம்

முத்தமிழ் வித்தகரும் பல்துறை வல்லுநரும், இறைபக்தியில் ஈடுபாடு மிக்கவருமாகிய திரு. அ. கி. ஏரம்பமூர்த்தி அவர்கள் தாம்பெற்ற இன்பம் உலகினரும் பெறவேண்டும் என்னும் பரந்த நோக்குடன் இந்நூலை யாத்துள்ளார்.

நூலின் பெயர் அதன் உண்மையை விளக்கும். இவ் வித்தகர் நானிலம் போற்ற நல்வாழ்வு பெற்று வாழ அம்பலவாணன் திருவடிக்கீழ் சித்தத்தை வைத்து வந்தித்து வாழ்த்துகிறோம்.

சோலையம்மன் வீதி,
மீசாலை
28.05.2006

வேதவனம் - ஆறுமுகம்

பாரதி பதிப்பகம், காங்கேசந்துறை வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org